# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 43 International Editor : MICHAEL W. SMITH இதழ் - 43


## என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்


மனுக்குலம் ஆனது உயிருள்ள ஆத்துமாவுடன் சிருஷ்டிக்கப்பட்டது. சிருஷ்டிப்பு முதலாய் ஆராதனையின் உள்ளார்ந்த உந்துதல் காணப்பட்டது. அந்த ஆராதனைக்குரிய ஒரே தேவன் ஆவிக்குரிய தேவன் நம் யாவே கர்த்தர். எனினும் ஜனங்களுடைய ஆவியிலே பல கடவுள்களுக்கான வணக்கங்களும், விக்கிரகத்திற்கும், அசையும் அசையா பொருள்களுக்கும், சிலைகளுக்கும் ஆராதனை செய்யும் பழக்கம் தோன்ற தொடங்கியது. இதுவே விக்கிரக ஆராதனை. மெய் தேவனுக்குரிய ஆராதனையின் இடத்தை விக்கிரகங்களும் பொய்யாக உருவாக்கப்பட்ட தெய்வங்களும் பிடித்துக்கொண்டன. மாம்சீகத்திலோ அல்லது ஆவியிலோ கர்த்தரைத் தவிர வேறு எந்த ஒரு காரியம் உங்கள் அன்பையும், நேரத்தையும், ஆற்றலையும், பணத்தையும் அர்ப்பணிப்பையும் கட்டுப்படுத்துகிறதோ அதுவே விக்கிரக ஆராதனை

மனுக்குலத்தின் நாகரிகம் வளர்ச்சி அடைய தொடங்கி 1000 ஆண்டுகளிலேயே பலவிதமான பெயர்களில் அழைக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான தெய்வங்கள் தோன்றலாயின. பழைய ஏற்பாட்டில் அநேக பொய்யான தெய்வங்களும், பேய் வணக்கங்களும் உருவாக்கப்பட்டன. தாகோன் என்று சொல்லப்படக்கூடிய மனுஷ தலையையும், மீனின் உடல் அமைப்பையும் கொண்ட இந்த தெய்வம் பெலிஸ்தர்களின் தெய்வமாய் இருந்தது. (1 சாமு 5 : 1 -5). மெரோ தாக் அல்லது பேல் என்பது பாபிலோனியர்களின் தெய்வம். இதை வானத்துக்கும் பூமிக்கும் தெய்வ மாய் அவர்கள் வணங்கினார்கள்(எரே 50 : 2) . பாகால் கானானியர்களின் சூரிய கடவுளாக போற்றப்பட்டது.

1 இராஜா 18ல் எலியா தீர்க்கதரிசிக்கும் பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கும் இடையே உண்டான தர்க்கம் யாதெனில் வானத்திலிருந்து அக்கினி இறங்கி வரும் தெய்வமே உண்மையான தெய்வம் என்பது.1 இரா 11 : 33. சீதோனியரின் தெய்வமான அஸ்தரோத்தையும், மோவாபி யரின் தேவனாகிய காமோசையும் அம்மோன் புத்திரரின் தேவனாகிய மில்கோமையும் பற்றி வாசிக்கிறோம்.அக்கினியின் தேவன் மோளேகு பிள்ளைகளை பலியாய் வாங்கும் கடவுள்.

இதைக் குறித்து லேவி 18 : 21 இல் கூறப்பட் டுள்ளது. கண்டுபிடிக்கப்பட்டவைகளில் மிக மிக சொற்பமான கடவுள்கள் இவை. மனுஷனுடைய கற்பனைகளினால் மிருகம் மற்றும் மனுஷீக சாயலாக உருவாக்கப்பட்டவைகள்.
இஸ்ரவேல் ஜனங்கள் சந்ததி சந்ததியாக ஆராதனை செய்து வந்த கர்த்தரை விட்டுவிட்டு தாங்கள் வாழ்ந்த இடங்களில் இருந்தவைகளை தெய்வமாக்கி கொண்டார்கள். சீனாய் மலையிலே இஸ்ரவேல் ஜனங்கள் ஆரோனிடம் செய்யும்படி சொன்ன பொன்னாலான கன்றுக் குட்டி உருவமும் ஒன்றுதான் (யாத் 32 : 1 -4).

கர்த்தரால் எழுதிக் கொடுக்கப்பட்ட 10 கட்டளை களில் என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.யாதொரு விக்கிரகத்தையும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம் என்றும், நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தராய் இருக்கிற நான் எரிச்சல் உள்ள தேவனாய் இருக்கிறேன் (யாத் 20 : 3-5). இது கர்த்தர் எல்லா ஜனங்களுக்கும் செய்யும்படி சொன்ன கட்டளைகள். அந்நிய தேவனை பணிந்து கொள்ள வேண்டாம்(யாத் 34 : 14). புதிய ஏற்பாட்டில் மீண்டும் கர்த்தராகிய தேவன் இதை வலியுறுத்துகிறார்.



**என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.உன் தேவனாகிய கர்த்தராகிய நான் எரிச்சலுள்ள தேவன்.**


| தலையங்கம் | வேதபாடம் உருவ வழிபாடு | துணை கட்டுரை உலகத்தின் வழிபாடுகள் | அடையாளம், முத்திரை கடவுள்கள் பாரம்பரிய முறைகள் | உங்களுக்கு தெரியுமா? ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை தேவனுக்கே மகிமை |
|---|---|---|---|---|
| 3 | 4 | 5 - 6 | 7 | 8 |

# வேதாகமம், நமக்கு போதிப்பது என்ன..... ?



**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ; மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23, 1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4, எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1 : 15-16 ; தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ; 1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ; வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ; 1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ; 1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ; உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28,29 ; 2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ; 2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15

உன் தேவனாகிய கர்த்தரை பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக. (லூக்கா 4 : 8) .நீங்கள் உங்களுக்கு விக்கிரகங்களையும், சுரூபங்களையும், உண்டாக்காமல் உங்கள் பரலோகத்தின் தேவனையே ஆராதிப்பீர்களாக (லேவி 26 : 1). கையால் செய்யப்பட்ட விக்கிரகங்களையும் வார்ப்பிக்கப்பட்ட கல்லுகளையும் பணிந்து கொள்ள வேண்டாம். என எச்சரிக்கிறது. உபாகமம் 4 : 15 -19 நீங்கள் உங்களை தீட்டுப்படுத்தலாகாது. மிருகசாயலிலோ ,மனுஷ சாயலிலோ நீங்கள் உங்களுக்கு தெய்வங்களை உண்டு பண்ண கூடாது.அவர்கள் சூரியனையோ, சந்திரனையோ நட்சத்திரங்களையோ வணங்க கூடாது என்று எச்சரிக்கப்பட்டார்கள். ஒரே ஒரு மெய் தேவன் உண்டு. எல்லா துதியும் கனமும் மகிமையும் அவர் ஒருவருக்கே.



நம் இருதயத்திலோ மாம்சீகத்திலோ கர்த்தரை தவிர வேறொரு தெய்வமும் இருக்க கூடாது

மிகப்பெரிய கட்டளைகளில் அன்பே பிரதானமானது. இஸ்ரவேலே கேள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரை கர்த்தர் (மாற்கு 12 : 29). என்னை தவிர தேவன் இல்லை. எல்லா நாமத்திற்கும் மேலான நாமமுடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமமே தொழுது ஸ்தோத்தரிக்கப்படுவதாக (ஏசாயா 44 : 6).

மார்ஸ் மேடையின் நடுவில் நின்று, அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு மிகப்பெரும் சத்தியத்தை வானத்துக்கும் பூமிக்கும் தேவனாகிய கர்த்தர் நீங்கள் அறியாத தேவன் அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன் (அப் 17 : 22 – 31). கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறது இல்லை. அவர் ஒரு நாளை குறித்து இருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயம் தீர்ப்பார். மனுஷருடைய சித்திரவேலையினாலும், யுக்தியினாலும் உருவாக்கின பொன்,வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்கும் என்று நாம் நினைக்கலாகாது.அவருடைய ஒரே குமாரனாம் இயேசு கிறிஸ்து நமக்காக சிலுவையில் மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழும்பினார். இந்த தேவனால் தான் உள்ளார்ந்த ஆத்தும சமாதானமும் நமக்கு தரக்கூடும். உண்மையாக தேவனே துதிக்கு பாத்திரர், கர்த்தராகிய தேவரீர் மகிமையும், கனத்தையும், வல்லமையும் பெற்றுக் கொள்ளுகிறதற்கு பாத்திரர்(வெளி 4 : 10 – 11). எல்லாவிதமான அந்நிய தெய்வ வணக்கங்களும் நம் வாழ்வை விட்டு அகற்றப்பட வேண்டும். கர்த்தருடைய நாமம் எரிச்சல் உள்ளவர் (யாத் 34 : 14). இன்று வரை பலவிதமான பொய்யான நாமம் உள்ள கடவுள்களுக்கு ஜனங்கள் ஆராதனை செய்து வருகிறார்கள். பண்டைய காலத்தில் அழைக்கப்பட்ட பெயர்களை மட்டும் மாற்றி இன்னும் பல விதமான விக்கிரக வணக்கங்கள் ஏற்படுத்தப்பட்டு கொண்டே இருக்கிறது. பல நாடுகளின் ஜனங்கள், ஆதிவாசி ஜனங்கள் இவர்கள் யாவருமே விக்கிரக பிரியர்களே. இது பாவம் இருதயத்திலோ அல்லது மாம்சீகத்திலோ வேறொரு கடவுளை நாம் நினைக்கவே கூடாது. சில கிறிஸ்தவர்கள் கூட உருவ வழிபாடுகள், அந்நிய தெய்வ வணக்கங்களை வரலாற்றிலே நம் முன்னோர்கள் செய்தது போல செய்து வருகிறார்கள். நம் ஆராதனையையும் வாழ்வையும் பரிசுத்தப்படுத்த வேண்டும். ஒரே மெய்யான தேவன். அவருக்கே ஆராதனை செய்யக் கடவோம்.

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க www.thegospeltruth.org என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :–*

**ஆயர். W.S.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227, சர்ச் தெரு, கோலார்பட்டி , தென் இந்தியா - 642 107**

# Editorial ஆசிரியரின் தலையங்கம்

நான் கர்த்தர். இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன் – ஏசாயா 42 : 8

தேவன் மகிமையானவர். அவருடைய கிரியைகள், அற்புதமானவைகள். சர்வ வல்லவராகிய நம் தேவாதி தேவனுக்கு ஒப்பாக வானத்திலும், பூமியிலும், வேறொன்றும் இல்லை. அவரைத் தவிர வேறொரு தெய்வத்திற்கும் மகிமையும், கனமும், செலுத்தப்படலாகாது. கர்த்தரே மனக்குலத்தை இரட்சிக்க முடியும், நித்திய வாழ்கையும் தர அவரால் மாத்திரமே கூடும். இந்த மாத இதழுக்கான தலைப்பு விக்கிரக ஆராதனை அல்லது உருவ வழிபாடு. உலகம் முழுவதும் பலவிதமான கடவுள்களும், தெய்வ வணக்கங்களும், வழிபாட்டு முறைமைகளும் பின்பற்றப்படுகின்றன, இவ்வுலகப் பொருளை அவர்கள் நமஸ்கரிக்கிறார்கள், அதை தவறு என்று ஏற்றுக்கொள்ளாமல் தொடர்ந்து அதனையே சேவிக்கின்றனர். பேய் வணக்கங்களையும், தவறான உருவ வழிபாடுகளையும் பின்பற்றுகிற ஜனங்கள் ஒரு விசை மனம் திரும்பி உண்மையான தெய்வத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் வீடுகளில் உள்ள உருவங்கள், அவை சார்ந்த பொருட்கள் யாவும் அகற்றப்பட வேண்டும் என்று தேவனுடைய வார்த்தை நம்மை எச்சரிக்கிறது.

பல கிறிஸ்தவர்கள் இதனை ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் மற்ற தெய்வங்களை குறித்து என்ன சொல்கிறார்கள்? கைகளால் செய்யப்பட்ட பல நாடுகளின் தெய்வங்களை குறித்து என்ன சொல்லப்படுகிறது? தன்னையே கடவுளாக பாவிப்பவர்களின் நிலை என்ன? சபையின் விக்கிரகம் எது? போதகர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் விக்கிரகமாக கருதப்படுவது எது? ஒரு கிறிஸ்தவனாக நாம் விக்கிரக ஆராதனையை அங்கீகரிக்கிறோமா?நாம் நம்முடைய நேரத்தை எவ்வாறு செலவிடுகிறோம்? சமூக வலைத்தளங்களும், பொழுதுபோக்கு, விளையாட்டுகளும் நமக்கு விக்கிரகங்களாக மாறி வருகின்றதா? நம்மை சுற்றி இருக்கிற எந்த ஒரு காரியம் நம் நேரத்தை வீணாக்கி நம்மை அடிமைப்படுத்துகிறதோ அதுதான் விக்கிரகம்.

பரலோக தேவனை காட்டிலும் எதற்கு நாம் மிக முக்கியத்துவம் தருகிறோமோ அதுவே விக்கிரக ஆராதனை. ஜனங்கள் எளிதாக தங்கள் நேரத்தையும், பணத்தையும் விரயமாக்கி விடுகிறார்கள். அதுவே தேவனுடைய காரியம் என்று வரும்போது நேரமும் பணமும் மாத்திரம் போதாது. நம் ஆவியில் இதனை சிந்தித்துப் பார்க்க கடவோம்.

சுய பரிசோதனை செய்யுங்கள். தேவனுக்கு செலுத்தப்பட வேண்டிய கனத்தையும், மகிமையையும் அவருக்கான இடத்தையும் வேறொரு காரியம் அல்லது செயல் உங்கள் வாழ்வில் முக்கியமாய் தோன்றுகிறதோ என சிந்தியுங்கள். நாம் எப்போதுமே சுயநலமான எண்ணத்திலும், மாம்சீகத்திலுமே சிந்திக்கிறோம். தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக. கர்த்தர் இதை எப்படி பார்க்கிறார்? நம் சிருஷ்டிப்பின் நாயகருக்கு நாம் இந்த விக்கிரக ஆராதனை கூட்டத்தாரோடு சேர்ந்து கொண்டு என் இதயம் நேர்மையானது என்றுதான் இன்னும் மேன்மை பாராட்டிக் கொண்டிருக்கிறோமா?

திருமணம் என்பது தேவனோடு உள்ள ஐக்கியம் போன்ற ஒரு உறவாகும். நான் என்னுடைய பழைய பெண் தோழியோடு அமர்ந்து கொண்டு, புகைப்படம் எடுத்து, அவர்களுடைய பிறந்தநாள் கொண்டாட்டத்தில் வருடம் தோறும் பங்கேற்று விட்டு, இருந்தால் என் மனைவிக்கு நான் என்ன செய்தியை சொல்ல முடியும்? என் இருதயத்தில் அப்படி ஒன்றும் இல்லை என்று என் மனைவியிடம் சொன்னால் சரியா ?இப்படி தானே தேவனிடத்திலும் நாம் மாறுபடுகிறவர்களாக தோன்றுகிறோமா? முழு இருதயத்தோடும் உம்மில் அன்பு கூறவும், எல்லாவிதமான விக்கிரக ஆராதனைகளினின்று வெளியே வரவும் எங்களுக்கு கிருபை செய்யும்.

ஆன்லைனில்

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

**பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக**

## முதலாவது கர்த்தரா? நவீன கால விக்கிரகங்களை அடையாளம் காண்க

| | | |
|---|---|---|
| என்னுடைய கரிசனை எங்கே உள்ளது ? | பணம், பொருள் | தெய்வ பயமற்ற உறவுகள் |
| என்னுடைய திருப்தியான மனதை எங்கே தேடுகிறேன்? | வேலை, அந்தஸ்து | கைப்பேசிகள், தொழில்நுட்பம் |
| அது என் மனதை ஆக்கிரமிக்கின்றதா? | ஈர்ப்பு வெட்கம் | மத கோட்பாடுகள் |
| என் நேரம் எங்கே வீணாகிறது? | தோற்றம் | கல்வி |
| என் பணம் எங்கே வீணாகிறது ? | விளையாட்டு, | நாட்டு பற்று |
| | பொழுதுபோக்கு | |



# வேதபாட வழிகாட்டி

## பொருள் : உருவ வழிபாடு

**வேத வாசிப்பு :** உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக- லூக்கா 4 : 8

**வரையறை :** உருவ வழிபாடு ஆனது, உருவம், சொரூபங்கள் இது போன்ற தெய்வமல்லாதவற்றை நமஸ்கரிப்பதை குறிக்கும்.பொய்யான தெய்வங்களை வணங்குவதும் அதிகப்படியான ஈடுபாடும் பெருமதிப்பு பாராட்டலும் தவறானது அன்பும் பய பக்தியும் வழிபாட்டில் எல்லை (மிரியம் - வெப்ஸ்டர் அகராதி சுருக்கம்) .

**செய்திச் சுருக்கம் :** தேவனைத் தவிர, மற்ற யாதொன்றை வணங்கினாலும் அது விக்கிரக ஆராதனை. உருவம் கண்டெடுக்கப்பட்ட கடவுள் மனுஷனுடைய தெய்வீக வழிபாடுகள் மேலும் வேறு எந்த உலக காரியம் உங்கள் நேரத்தையும் பணத்தையும் ஆற்றலையும் விரயமாக்குகிறதோ அதுவே விக்கிரகம்

### I.ஒரே ஒரு மெய் தேவன் உண்டு

A.மாற் 12 : 28 - 29 கர்த்தர் ஒருவரே கர்த்தர்
B.ஏசா 44 : 6 என்னைத் தவிர தேவன் இல்லை
C.1 தீமோ 2 : 5 தேவன் ஒருவரை மத்தியஸ்தரும் ஒருவரே
D.வெளி 4: 10- 11 தேவர் நீர் நீரை சகலத்திற்கும் பாத்திரர்

### II. உருவ வழிபாடு எச்சரிக்கப்படுதல்

A.யாத் 20 : 35 என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள். உண்டாயிருக்க வேண்டாம். நான் எரிச்சல் உள்ள தேவன்
B.உபா 4 : 15 - 19 சந்திர சூரிய நட்சத்திரங்களை தொழுது சேவிக்க வேண்டாம்.
C. லேவி 26: 1 விக்கிரகங்களை உண்டாக்காமல் இருங்கள்
D. உபா 7 : 3 -4 அந்நிய தெய்வங்களை சேவிக்கிறவர்களோடு சம்பந்தம் கலவாயாக

### III. கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை

A.லூக் 4 : 7-8 கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக
B. மத் 6 : 24 இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது

### IV. மெய் தேவனும் விக்கிரகமும்

A. அப் 17 : 22 -31 சிருஷ்டிகரை தொழுதுகொள் சிருஷ்டிப்பை அல்ல
B. உபா 4:28 மனுஷர் கைவேலை ஆகிய தேவர்களை சேவிக்கக்கூடாது

### V. பழைய ஏற்பாட்டு உருவ வழிபாடு

A.**கன்றுக்குட்டி** : யாவே கர்த்தரை குறிப்பது அல்லது எகிப்திய வழிபாட்டு முறை (யாத் 32 : 1 -4)
B.**நெபுகாத்நேச்சார் பொற்சிலை :** தானி 3 : 1 - 5
C.**தாகோன் :** பெலிஸ்தர்களின் தெய்வம், மனுஷத்தலை மீன் உடல் அமைப்பு (1சாமு 5 : 1 -5)
D.**மெரோதாக்(மர்டக், பேல்) :** பாபிலோனிய கடவுள் எரே 50 : 2
E.**பாகால்:** தானியங்களின் தெய்வம். சூரியக்கடவுள், புயல் கடவுள் (1 இரா 18 : 21 - 40)
F.**அஸ்தரோத்** : சீதோனியர்களின் கடவுள்.
G.**காமோஸ்** : மோவாபிய தேசத்தின் கடவுள்.மனிதர்களை பலியிடுவார்கள்.
H. **மில்காம் :** அமோனியர்களின் கடவுள் (1இராஜா 11 : 33)
I. **மோளேகு :** அக்கினி கடவுள். பிள்ளைகள் பலி. (லேவி 18 : 4)

### VI. பிரபஞ்சத்தின் தேவன்

A.2கொரி 4 : 4 பிரபஞ்சத்தின் தேவன் அவர்களுடைய மனதை குருடாக்கினான்.
B.எபே 2 : 2 ஆகாயத்தை அதிகார பிரபுவாகிய ஆவி
C.எபே 6 : 10- 13 அந்தகார லோகாதிபதிகள்

### VII. தவறான மதம் மற்றும் பாரம்பரிய வழிபாடுகள்

A.வெளி 14: 8- 10 மிருகமும் சொரூபமும்
B.மாற் 7: 6-9 மனுஷனுடைய பாரம்பரியத்தை கைக்கொண்டு வருகிறீர்கள்

### VIII. மனுஷீக ஆராதனை

A. அப் 12 : 21 -23 ஏரோது தன்னை கடவுளாக காண்பித்தான்
B. 2தெச 2 : 3-4 பாவ மனுஷன்
C. அப் 14 : 12 - 15 பவுலும் பர்னபாவும்
D. வெளி 19 : 10 தேவதூதனை வணங்க கூடாது
E. யோவா 7 : 16-18 சுயமாய் பேசுவது கிறிஸ்துவுக்கு விரோதமானது
F. 2 கொரி 4 : 5 உங்களை பிரசங்கிக்க கூடாது

### IX.புதிய ஏற்பாட்டு விக்கிரக ஆராதனை

A. கொலோ 3 : 5 பேராசையும் ஒரு விக்கிரக ஆராதனை
B. பிலி 3:19 அவர்களுடைய தேவன் வயிறு
C. ரோமர் 16 : 18 தங்களுக்கே ஊழியம் செய்யக்கூடாது

### X.இவ்வுலகப் பொருளுக்கு ஆராதனை செய்யக்கூடாது

A. 1 யோவா 2 : 15 - 16 உலகத்தில் உள்ளவைகளில் அன்பு கூராதீர்கள்.
B. ரோமர் 1 : 23- 27 ஓரினச்சேர்க்கை எனும் தப்பிதம்
C. 1 தீமோ 6: 10- 11 பண ஆசை
D. 2 தீமோ 2: 3 -4 இவ்வுலக காரியங்கள்

### XI.விக்கிரக ஆராதனைக்கு எதிரான நியாயத் தீர்ப்பு

A. கலா 5 : 19 - 21 விக்கிரக ஆராதனை செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை.

**முடிவு :**

இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.
- மத் 6 : 24

# கிறிஸ்தவ உலகத்தின்
# விக்கிரக ஆராதனை

**பொய்யான தெய்வங்களையும், விக்கிரக ஆராதனையும் குறித்து அறிந்து கொள்ளும்படி ஒருவர் பண்டைய நாகரிகத்தை கவனிக்க வேண்டியதில்லை. நவீன கால இந்த சமுதாயத்தில் எங்கும் நம்மை சுற்றி விக்கிரகங்களே நிறைந்துள்ளன. ஒரு உருவத்தையோ அல்லது சொரூபத்தையோ வணங்குவது மட்டும் விக்கிரக ஆராதனை கிடையாது. மாறாக எந்த ஒரு பொருளோ அல்லது காரியமோ கர்த்தரைக் காட்டிலும் மேன்மையான இடத்தை தருகிறோமோ அதுவே விக்கிரக ஆராதனை. ஜான் கால்வின் இதை இவ்வாறு எழுதுகிறார் மனுஷனுடைய இருதயம் ஒரு விக்கிரக தொழிற்சாலை.**



### நம்முடைய நாட்களில் காணப்படும் விக்கிரக ஆராதனை

தேவனுடைய கட்டளைக்கு மாறாக இன்று உலகம் முழுவதிலும் உள்ள ஜனங்கள் கையால் செய்யப்பட்ட சொரூபங்களை வணங்கி தொழுது கொள்கிறார்கள். எப்படி இருப்பினும் சமுதாயத்தில் பெரும்பாலான ஜனங்கள் விக்கிரக ஆராதனையை வெறுத்தாலும் ஒவ்வொருவருடைய இருதயத்திலும் மனதிலும் அழிக்க முடியாத அநேக விக்கிரகங்களாகிய அடிமைத்தனங்களுக்கு நம் நேரம், பணம், பாசம் எல்லாவற்றையும் செலவு செய்து கொண்டிருக்கிறோம். கர்த்தருக்கும் மேலாக எப்போது ஒரு காரியம் முக்கியத்துவம் பெறுகிறதோ அதுவே விக்கிரகம்

> **கர்த்தருக்கும் அவருடைய வார்த்தைக்கும் மேலாக எப்போது ஒரு காரியம் உங்கள் நம்பிக்கையை பெறுகிறதோ அதுவே விக்கிரகாரதனை**

### ஆவிக்குரிய யுத்தம்.

சாத்தானுக்கு எதிரான ஆவிக்குரிய யுத்தத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். வஞ்சிக்கும் பலவிதமான ஆவிகள் மெய்யான தேவனுக்கு ஆராதனை செய்வதை விட்டு நம்முடைய இருதயத்தை விலகசெய்து கொண்டிருக்கின்றன.ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (எபேசி 6 : 12). தீங்கு நம்மை சுற்றிலும் இருக்கிறது. சுயம், பாவம், இன்பங்கள், களியாட்டங்கள், அரசியல், மதம், நாட்டுப்பற்று, அறிவியல், கல்வி, பொருள்களை இடுதல் இவை யாவும் ஒருவிதமான அடிமைத்தனமே இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான் (2 கொரி 4 : 4).

### மதம் என்கிற விக்கிரக ஆராதனை.

புறமத வழிபாடுகளில் மாத்திரம் விக்கிரகாரதனை காணப்படவில்லை. மாறாக புராட்டஸ்டண்ட் பிரிவினர் மற்றும் ஆதி திருச்சபையினரிடத்திலும் இந்த பழக்கம் காணப்படுகிறது. இவர்களிடம் காணப்படும் பழக்கவழக்க பாரம்பரிய வழிபாடுகளுக்கான எந்த ஒரு அடித்தளமும் தேவனுடைய சத்திய வசனத்தில் இல்லை. இதனை மேன்மை பாராட்டும் எந்த ஒரு சமயமும் ஒருவகையான விக்கிரக ஆராதனை கூட்டத்தாரை மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்கி தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையை தரித்து கொள்கிறவன் எவனோ அவன் தேவனுடைய கோபக்கினையாகிய பாத்திரத்தில் பங்கடைவான் (வெளி 14 : 9 – 10).

ஜனங்கள் கிறிஸ்துவுக்கு தங்களை அர்ப்பணிப்பதை காட்டிலும் மேலாக தாங்கள் சார்ந்த ஐக்கியத்திற்கும், சமயம் சார்ந்த நிர்வாகத்திற்கும், அதிகமாய் தங்களை அர்ப்பணிக்கிறார்கள். மாற்கு 7 : 6–9ல் இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னை கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்கு தூரமாய் விலகி இருக்கிறது. நீங்கள் தேவனுடைய கட்டளையை தள்ளி விட்டு மனுஷனுடைய பாரம்பரியத்தை கைக்கொண்டு வருகிறீர்கள். தேவனுடைய வார்த்தையை கைக்கொள்ளாமல் தேவனிடத்தில் அன்பு கூறுகிறேன் என்று சொல்வது சரியல்ல. தேவ சபை பரிசுத்தவான்களில் அநேகர் இப்படி பெயர் கிறிஸ்தவர்களாக தான் இருக்கிறார்கள். கர்த்தருடைய கற்பனைகளுக்கும் மேலாக எந்த ஒரு பாரம்பரிய கோட்பாடுகளும் நிற்கக்கூடாது.

### மனுஷீக வணக்கங்கள்

அரசியல் தலைவர்களோ அல்லது பிரபலமான ஊழியர்களோ போற்றுதலுக்குரியவர்கள் அல்ல. அப்போ 12 : 21 – 23 ல் ஏரோது பிரசங்கித்ததை கேட்ட ஜனங்கள் இது மனுஷ சத்தமல்ல. இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான். அவன் புழுப் புழுத்து இறந்தான். ஏனெனில் அவன் தேவனுக்கு அல்ல. தனக்கே மகிமையை தேடிக்கொண்டான் 2தெச 2 : 3–4ல் மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாக இருங்கள். பாவ மனுஷன் தேவனைக் காட்டிலும் தன்னை மேன்மைப்படுத்திக் கொள்கிறான். சில ஸ்தாபனங்களின் உயர்ந்த பதவியில் இருப்போர் ,இந்த மாதிரியான சிந்தனை தேவனை நிந்திப்பதற்கு ஒப்பாகும். இதுவும் விக்கிரக ஆராதனையே. எப்படி இருப்பினும் போதகர்கள், கண்காணிகள், போதகத் தலைவர்கள், ஒவ்வொரு மதம் சார்ந்த ஐக்கியத்தின் உயர் பதவியில் இருப்போம் என ஒவ்வொருவரும் கிறிஸ்துவை அல்ல தங்களையே மேன்மை பாராட்டி கொள்கிறார்கள்.

கிறிஸ்துவுக்கு உண்மையான ஊழியக்காரனாகவும், ஊழியக்காரியாகவும் தங்களை தாங்களே மெச்சிக் கொள்கிறார்கள். கிறிஸ்து ஒருவரே நம்முடைய துதிகளுக்கு பாத்திரர். மனுஷன் அல்ல, பவுலும், பர்னபாவும் செய்த அற்புதங்களை கண்டு ஜனங்கள் அவர்களுக்கு பூமாலைகளை கொண்டு வந்து பலியிட மனதாய் இருந்தார்கள் (அப் 14 : 12–15) . ஆனால் இந்த உண்மையான தேவனுடைய ஊழியக்காரர்கள் அவர்களை எச்சரித்து நாங்களும் உங்களைப் போல பாடுள்ள மனுஷன் தானே. ஏன் இப்படி செய்கிறீர்கள் என்றனர். வெளிப்படுத்துதல் விசேஷத்தில் யோவான் தனக்கு தரிசனம் தந்த தூதனை

வணங்க முற்பட்ட போது தேவ தூதன் பிரதியுத்தரமாக, நானும் ஒரு ஊழியக்காரன் தேவனை தொழுது கொள் என்கிறார். (வெளி 19 : 10). ஆவிக்குரிய தலைவர்களை வணங்கும் ஒவ்வொரு விசுவாசிகளுக்குள்ளும் ஊழியக்காரனுக்குள்ளும் விக்கிரகாராதனை குடிகொண்டுள்ளது. ஆகவே தேவ ஊழியர்கள் ஒருபோதும் இதை ஏற்றுக் கொள்ள கூடாது.

**சுய மகிமை**



**சுய மேன்மை என்பது ஒருவிதமான விக்கிரக வணக்கம். இந்த சந்ததியில் பரவலாக காணப்படும் விக்கிரகாராதனை இதுவேயாகும்.**

சுயமகிமையை தேடுகிற எந்த ஒரு காரியமும் விக்கிரக ஆராதனை. சுய மகிமையை நாடுவதே இந்த சந்ததியாரின் விக்கிரகம். இது உலக பிரகாரமான காரியங்களுக்கும் ஆவிக்குரிய காரியங்களுக்கும் பொருந்தும். (யோவான் 7 : 16 – 18) ல் இயேசு சொல்கிறார். சுயமாய் பேசுகிறவன் தன் சுய மகிமையை தேடுகிறான். சபை சார்ந்த ஐக்கியத்தில் தங்கள் சுய மகிமையிலே மேன்மை பாராட்டுகிறவர்களே! அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவதை கேளுங்கள். நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவையே கர்த்தர் என்று பிரசங்கிக்கிறோம். 2 கொரி 4 : 5 தங்கள் சுய திட்டம், எண்ணம், வழிகளின் பெயரில் நம்பிக்கை வைக்கிற ஜனங்களை தான் இந்த சந்ததியாரில் காண முடிகிறது. அவர்கள் தங்களை நேசிக்கிறார்கள். சுயநலமாகவும் வாழ்கின்றனர். இதுவும் விக்கிரக ஆராதனையே. பிலி 3 : 19 அவர்களுடைய முடிவு அழிவு. அவர்களுடைய தேவன் வயிறு .அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலட்சையே. அவர்கள் பூமிக்கு அடுத்தவைகளை சிந்திக்கிறார்கள். தேவனுக்கேற்ற பரிசுத்த காரியங்களை விட்டு விலகி தங்களுடைய சுயஇச்சைக்கும் திருப்திக்கும் ஆசைப்படுகிறார்கள். அவர்கள் வயிற்றினால் திருப்தியடைகிறார்கள். அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல், தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்கிறார்கள் (ரோமர் 16 : 18) . பெருந்தீனிக்காரர்களுக்கு மாத்திரமல்ல மாம்சீகத்தினால் விளையும் செயல்பாடு களுக்கும் பொருந்தும்.

**இப்பிரபஞ்சத்தின் லோகாதிபதி**

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே நம் அன்புக்கு பாத்திரர். ஆனால் பலர் இவ்வுலகத்தின் ஆசைகளுக்கு அடிமைப்பட்டு கிடக்கிறார்கள். உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்பு கூராதீர்கள். (1 யோவான் 2 : 15). கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை இந்த கால விக்கிரகங்கள், ஜனங்கள் என்ன இச்சையில் இழுப்புண்டு போகிறார்கள் ? அவர்களுடைய நேரம், பணம், ஆற்றல் இவைகளை கட்டுப்படுத்துவது எது? தேவைகளின் சமயங்களில் ஜனங்கள் எப்படி திரும்புகிறார்கள்? நாட்டுப்பற்று, நாகரீகம் , பொழுதுபோக்கு, விளையாட்டு போன்ற மாம்சீக இன்பங்கள் இந்த இடத்தை நிரப்புகிறதா? பல ஜனங்கள் இந்த விக்கிரகங்களுக்கு தான் பலியாகின்றனர்.

**விக்கிரக ஆராதனையும் துன்மார்க்கனும்**

ரோமர் 1 : 23- 27 ல் அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். வசனம் 26 சொல்கிறது சிருஷ்டிகரை தொழுது சேவியாமல் சிருஷ்டியை தொழுது சேவித்தார்கள். மாம்சீக இச்சையும் ஆணோடே ஆண், பெண்ணோடே பெண் என்று சுபாவத்துக்கு விரோதமான அனுபோகமாக மாற்றினார்கள். இந்தப் பாவம் நாம் வாழும் இந்த சமுதாயத்தில் இன்றைய காலகட்டத்தில் மிகவும் பரவலாக பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு மிகப்பெரும் பாவ சமுதாயமாய் உருவெடுத்துள்ளது.

**விக்கிரக ஆராதனையான பொருளாசை**

கொலோ 3 : 5 நமக்கு விக்கிரகாரதையான பொருளாசையை குறித்து போதிக்கிறது. ஆகையால் விபச்சாரம் அசுத்தம் மோகம் துர் இச்சைகள் யாவும் விக்கிரக ஆராதனையே பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராய் இருக்கிறது 1 தீமோத்தேயு 6 : 10 பலர் விசுவாசத்தை விட்டு தவறி உலகத்தை கர்த்தரை விட அதிகமாக நேசிக்கிறார்கள் உங்கள் நேரம் பணம் ஆற்றல் இவைகளை எது கட்டுப்படுத்துகிறது? நீங்கள் கர்த்தராகிய தேவனுக்கு முன்பாக வேறு ஏதேனும் முக்கியத்துவம் கொடுக்கிறீர்களா? தேவனுடைய பரிசுத்த ஜனங்களே நீங்கள் உங்களை கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை செய்கிறவர்களாக உணருகிறீர்களா? வாழ்வின் சில முடிவுகளை எடுக்க உங்கள் இருதயத்தில் உணர்த்தப்படுகிறீர்களா? எங்கே வாழ்கிறீர்கள்? யாரை திருமணம் செய்து இருக்கிறீர்கள்? என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? எங்கே போய்க் கொண்டு இருக்கிறீர்கள்? ஏதாவது ஒரு விக்கிரகம் உங்களுடைய வாழ்வில் கர்த்தருக்கான இடத்தை எடுத்துக் கொள்ள கூடுமா?

**காரணங்களின் மேன்மை**

பவுல் தீமோத்தேயுவை எச்சரித்து தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும் பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ள மாட்டான் (2 தீமோ 2 : 3-4). சட்டப்படியான அநேக காரியங்களும் நாம் வாழுகிற இந்த காலத்தில் நாம் எச்சரிக்கையாய் இருக்கும்படி கவனிக்கப்பட வேண்டியுள்ளது. அரசியல், சமூக, சமுதாய காரணங்கள் கூட இந்த சூழ்நிலைகளில் ஒருவரை மேற்கொண்டு அடிமை ஆக்கி விட கூடும். தேவபிள்ளையே நல்லது என்று நினைத்து உங்கள் கால் சிக்கி விடாதபடி எச்சரிக்கையாய் இருங்கள். வெகு விரைவில் கிறிஸ்துவை விட, அவருடைய வழிகளை விட, அவருடைய அன்பு, மன்னிப்பு, நீடிய பொறுமையை காட்டிலும் உங்களுடைய காரணங்களே உங்களை மேற்கொண்டு விடும்.

**கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை**

பொன்னால், வெள்ளியால் செய்யப்பட்ட விக்கிரகங்களை விட இன்றைக்கு அநேக வஞ்சிக்கும் மரணத்துக்கு ஏதுவான விக்கிரகங்கள் தோன்றி பெருகிவிட்டன. ஒரே ஒரு மெய் தேவன் உண்டு. நம் அன்பும் ஆராதனையும் வெளிப்படையாக அவர் ஒருவருக்கே. நாம் ஒவ்வொருவரும் சுயபரிசோதனை செய்து நம்மிடமிருந்து இடிக்கப்பட வேண்டிய விக்கிரக ஆராதனைகள் எவை என்று பார்க்க கடவோம். உங்களை சுத்திகரித்து, பரிசுத்தப்படுத்தி இவ்வுலகத்தின் விக்கிரக ஆராதனையான காரியங்களை அகற்றுங்கள். ஏனெனில் இப்படிப்பட்டவைகளை செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை (கலா 5 : 19 – 21).

காஸ்பெல் ட்ரூத்


# கிறிஸ்தவத்தில், இஸ்ரவேல் மக்கள் மத்தியில் தோன்றிய சொரூபங்கள் அடையாளங்கள், தெய்வங்கள், பழக்கங்கள்

## உருவ வழிபாட்டில் வேரூன்றியது




**அடையாளம் :** மதம் சார்ந்த வல்லமை உடைய பாதுகாக்க, ஆரோக்கியம் தரும் ஒரு பொருளாக கருதப்படுகிறது. சிலுவை, முயல்கால், ஜெப மாலை

**கன்னி மரியாள்:** மரியாள் இயேசுவின் தாய். மூன்றாவது நூற்றாண்டில் இருந்து இவரிடம் வேண்டிக் கொள்ளும் பழக்கம் தொடங்கியது.

**புதிய காலம்:** எல்லாம் ஒன்றே. பலதரப்பட்ட சமய மத நம்பிக்கைகளை இயற்கையாகவே ஒன்றிணைத்து ஒரே கடவுள் கொள்கையை பிணைப்பது. கடவுள் எல்லா இடத்திலும் இருக்கிறார். மனிதன் தான் கடவுள். மெய்மையும் யதார்த்தம் அமானுஷ்ய அல்லது மறைவான கிரியைகள்.




**மூதாதையரை வணங்குதல்:** நம் முன்னோர்களை ஆவிகளாக கனம் செய்து அனுதின வாழ்வை பாதுகாத்து எச்சரிப்பதாக நம்பப்படுகிறது. சில சமயங்களில் உணவும் அவர்களுக்காக படைக்கப்படுகிறது.

**மாந்திரீகம்** : சில நிகழ்வுகளை கட்டுப்படுத்தவும், சில மனிதர்களை கட்டுப்படுத்தவும், செய்யப்படும் உபாயத் தந்திரங்கள்.




**ஜோதிடம்:** வானியல் கிரகங்களையும், நட்சத்திரங்களையும், கொண்டு வரப்போகும் நிகழ்வுகளை முன்கூட்டியே கணிப்பது. ஜாதகம்.

---

## விடுமுறை நாட்கள்

ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். 1 கொரி 10 : 31



**ஈஸ்டர்** (உயிர்த்தெழுந்த ஞாயிறு உடன் குழப்பாதீர்கள்) வசந்தகால மற்றும் கருவுறுதல் பெண் தெய்வத்திற்கான விடுமுறை நாள். முயல் தான் கருவுறுதலை குறிக்கும் எகிப்தியர்களின் அடையாளம் ஆகவே தான் ஈஸ்டர் முயல், முட்டைகள், கரு & வாழ்வின் அடையாளமாக கருதப்படுகிறது. மேலும் முட்டைகளை வண்ணமிடுதல் இவையெல்லாம் இயற்கையை வணங்கும் ஒரு சாராரின் பாரம்பரியம்.



**ஹாலோவீன்** மூதாதையர்களின் திருநாள். மரித்துப் போன முன்னோர்களை கனப்படுத்த கொண்டாடப்படுகிறது. செதுக்கப்பட்ட பூசணிக்காய், முள்ளங்கிகள் மற்றும் தீய சக்திகளின் ஆவிகள் பயன்படுத்தப்படுகின்றன. எட்டாவது நூற்றாண்டில் இந்த திருநாள் மாற்றி அமைக்கும்படி சகல பரிசுத்தவான்களின் திருநாள் அல்லது கல்லறை திருநாள் அனுசரிக்கப்பட்டது.



**கிறிஸ்துமஸ்:** சூரிய கடவுளின் மறுபிறப்பை கொண்டாடும் படி தோற்றுவிக்கப்பட்ட குளிர்கால பண்டிகை. ரோம கலாச்சார பாரம்பரியத்தை மாற்றும் பொருட்டு அதே விதமான கொண்டாட்டங்களுடன் கிறிஸ்துமஸ் என்ற பெயரிடப்பட்டு அனுசரிக்கப்படுகிறது. பச்சையான மரங்கள், மாலை வடிவ அலங்காரங்கள் எல்லாவற்றின் ஆணிவேரும் மூலாதாரமும் ரோமர்களின் கலாச்சாரமே.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section

TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY


உங்களுக்குத் தெரியுமா?

**செங்குத்தான மலைகள் :** 1000 ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த தூபியின் வரலாறு என்பது எகிப்தியர்களின் வழிபாடுகளில் சம்பந்தமுடையது. இது கரு கடவுள் மற்றும் சூரிய கடவுளான படைப்பின் கடவுள்களை போற்றும் வகையில் உருவாக்கப்பட்டது. இவர்களுடைய பல அடையாளங்கள் ஆதித் திருச் சபையோடு நான்காம் நூற்றாண்டுகளில் நுழைந்து விட்டது. ஆலய கோபுரங்கள் கண்காணிக்கும் கோபுரங் களாகவும் தீய சக்திகளை தீமைகளை விலக்கும் செயலுக்காக மணி சத்தத்தை ஒலிக்க பண்ணுதல். மேலும் பரலோகத்தை அடையும் அடையாளம். இவையெல்லாம் எகிப்தியர்களின் கடவுள் வழிபாடுகளில் இருந்து மெல்ல மெல்ல சபை கட்டிடக்கலை மற்றும் ஆராதனை மையங்களின் கட்டிடங்களுக்குள்ளும் பரம்பி விட்டது.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## அவருக்கே மகிமை உண்டாவதாக

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென் – 2 பேதுரு 3 : 18.



சிலைகள் மற்றும் நினைவுச் சின்னங்கள் மரித்தவர்களை நினைவு படுத்தவும் வாழ்வுக்கு ஊக்கமளிக்கும் விதத்திலும் எழுப்பப்பட்டது. மிகப் பெரிய பல்கலைக்கழகங்கள் யாவும் மனுக்குலத்திற்கு அறிவையும் மனிதர்களின் புத்தி கூர்மையை கௌரவிக்கவும் என்றும் நிலைத்திருக்க செய்யவும் கட்டப்பட்டது. வானாளாவிய உயர்ந்த கட்டடங்கள் மனிதர்களின் புத்திசாலித்தனம் திறமையை பிரதிபலிக்கிறது. நூலகங்களும் டிஜிட்டல் வடிவிலான நூலகங்களும் மனுஷர்களின் தத்துவ கோட்பாடுகளை வெளிக்காட்டுகிறது. ஓ தேவப் பிள்ளையே! இவ்வுலகத்தின் எந்த நியமங்களில் வாழ நாம் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்.

நாம் யாருக்கு மகிமை செலுத்துகிறோம்? நம் வாழ்வை எவ்வாறு அமைத்துக் கொள்கிறோம்? நம் மீட்பரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவுக்கே அனுதினமும் நாம் மகிமையை செலுத்துவதே தேவப் பிள்ளைகளாகிய நம் ஒவ்வொருவரின் நோக்கமும் தரிசனமாய் இருக்க கடவது. உலகத்தின் ஜனங்கள் தங்களை தாங்களே தங்கள் செயல்களாலும் திட்டங்களாலும் மேன்மைப்படுத்தும் போது நம்முடைய மேன்மை பாராட்டுதல் கிறிஸ்து ஒருவருக்கே.தேவனுடைய ஆவியானவரின் வல்லமையால் அவருடைய கிருபையையும், அனுக்கிரகத்தையும் பெற நாட வேண்டும். நாம் கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து அவருக்கு கீழ்படிகிறபடி கிறிஸ்துவின் குணாதிசயங்களின் படி நம்மை அர்ப்பணித்து பரிசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இப்படி செய்தால் கிறிஸ்து மேன்மைப்படுவார். உலகத்தின் இரட்சகரே இயேசு கிறிஸ்துவின் மகிமையை பிரஸ்தாபப்படுத்தும் நோக்கம் முயற்சி, கனவு, குறிக்கோள், லட்சியம் நமக்கு வேண்டும்,எல்லா துதியும் கனமும் மகிமையும் இயேசு கிறிஸ்துவுக்கே . அவரே ராஜாதிராஜா. கர்த்தாதி கர்த்தர். அல்பா, ஓமேகா ஆனவர். முந்தினவரும், பிந்தினவரும் ஆனவர். விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிப்பவரும் அவரே .இவ்வுலகத்தின் லோகாதிபதிகளுக்கும், பிரபுக்களுக்கும் மேலான சர்வ அதிகாரமும் பெற்றவர்.நம்மால் முடியும். அவமானமும் மன்னிப்பும் இல்லாமல் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்படி வாழுங்கள். ஒவ்வொரு நொடியும் நித்தியம் வரையிலும் சர்வ வல்லமையுள்ள கர்த்தருடைய பிரசன்னத்தில் வாழ ஒப்புக்கொடுப்போம். வாழ்வின் எல்லா சூழ்நிலையிலும் துதிக்கும் போற்றுதலுக்கும் உரிய ஒரே தேவன் அவரே. சோதனையின் வேளையிலும் அந்தகாரத்திலும், அக்கினியிலும், கண்ணீரின் பாதையிலும், மரணத்திலும் கூட கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. இது கடினமல்ல. கர்த்தருக்குரிய மகிமையையும், கனத்தையும் அவருக்கே செலுத்துங்கள். ■

CONTACT :-

The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.

Email :
vedhacog1954@gmail.com

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - **ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்த ஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with Real Truth

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 CHURCH STREET,-KOLARPATTI & P.O, SOUTH INDIA - 642 107. Cell : 95975 62641.

Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, V.J.Sam kirubaharan

Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316